**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வள்ளியூர்**
**முன்னிலை: திரு. பி. மோசஸ் ஜெபசிங், பி.எஸ்சி., எம்.எல்.,**
**நீதித்துறை நடுவர் வள்ளியூர்**

2025 வது வருடம், நவம்பர் மாதம், 21-ம் நாள், வெள்ளிக்கிழமை

**MP. No.02/2025**
in
**Crl.M.P. No. 152/2025**

தேவேந்திரபாண்டியன் .........மனுதாரர்

எதிர்

வின்செண்ட் ..........எதிர்மனுதாரர்

இம்மனுவானது 14.11.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில், அவரது கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. பாண்டியராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் தரப்பில், அவரது கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து கோப்புக்கு எடுக்க உத்தரவிடக்கோரி இந்த மனுவை Limitation Act 5 மற்றும் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 142 (b)ன் கீழ் மனுதாரர் சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் அசல் வழக்கில் புகார்தாரர். எதிர்மனுதாரர் அசல் வழக்கில் எதிரி.

**மனுவின் சுருக்கம்**

1. மனுதாரர் காசோலை மோசடி வழக்கை 23.04.2024 க்குள் தாக்கல் செய்யவேண்டிய நிலையில் 262 நாட்கள் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் மஞ்சள்காமாலை நோயினால் பாதிக்கப்பட்டிருந்த வெளியூர் காரணத்தினால் குறிப்பிட்ட காலத்திற்குள் அசல் வழக்கை தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதில்லை. எனவே மேற்படி 262 நாட்கள் கால தாமதத்தை மன்னிக்க கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர் தரப்பில் அறிவிப்பு அனுப்பப்பட்டு எதிர்மனுதார் தரப்பில் திரு. R. ராஜ்குமார் அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**எதிருரையின் சுருக்கம்**

2.1) மனுதார் பொய்யான சங்கதிகளை கூறி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும் உண்மையில் மனுதாரர் வட்டி தொழில் செய்து வரும் ஒரு நபர் என்றும் மனுதார் குடியிருப்பு இருப்பு திருக்குறுங்குடி என்றும் எதிர்மனுதார் குடியிருப்பு இருப்பு ஏர்வாடி என்றும் எதிர்மனுதாரர் ஏர்வாடியில் துணி தைக்கும் தொழில் செய்து வருகிறார் என்றும் மனுதார் ஏர்வாடியில் உள்ள கடைகளுக்கு நாள் வட்டி மற்றும் வார வட்டி என்று வட்டிக்கு பணம் கொடுத்து தொழில் செய்து வந்துள்ளார் என்றும் எதிர்மனுதார் கடையிலும் இருந்து பேசி பழகி வட்டிக்கு பணம் வேண்டும் என்றால் என்னிடம்

வாங்கிக்கொள்ளுங்கள் என்று அடிக்கடி பேசி வந்துள்ளார் என்றும் எதிர்மனுதாரும் மனுதாரின் ஆரம்ப பழக்கத்தில் எந்தவித பணமும் வாங்கவில்லை என்றும் எதிர்மனுதாரின் இரண்டு குழந்தைகள் பள்ளி படிப்பு படித்துக்கொண்டிருந்த நிலையில் திடீரென்று பார்வை குறைபாடு ஏற்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர் குழந்தைகளின் மருத்துவ செலவிற்கு அவசர தேவைக்காக பணம் தேவைப்பட்டதால் மனுதாரிடம் வட்டி அதிகமானதால் ரூ.10000/-கடந்த நவம்பர் 2022 ல் கேட்டுள்ளார் என்றும் ஷை ரூ,10000/-க்கு மனுதார் அன்றைய தினமே ரூ,1000/- வட்டி எடுத்துக்கொண்டு ரூ,9000/-மட்டுமே எதிர்மனுதார் கொடுத்துள்ளார்,

2.2) ஷை பணத்தை கொடுத்துவிட்டு மனுதாரர் எதிர்மனுதாரிடம் ஒரு காசோலை கட்டாயப்படுத்தி கேட்டுள்ளார் என்றும் எதிர்மனுதாரர் விரையில் உங்கள் பணத்தை தந்து விடுகிறேன் என்று கூறியும் மனுதாரர் கேட்காமல் எதிர்மனுதாரிடம் கையொப்பம் மட்டும் இட்டு காசோலை வற்புறுத்தி மனுதாரர் வாங்கியுள்ளார் என்றும் எதிர்மனுதாரர் வேறுவழியின்றி அவரது ஏர்வாடி கிளை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை எண்.000014 ஐ அவரது கடையில் வைத்து மனுதாரர் வற்புறுத்தி கேட்டதின்பேரில் கொடுத்துள்ளார், என்றும் ரூ,10000/- க்கு வார வட்டி ரூ,1000/- வார வட்டி என்றும் வார வார மனுதாரர் எதிர்மனுதாரர் கடையில் வந்து வட்டி பணம் ரூ,1000/-த்தை எதிர்மனுதாரிடம் வசூலித்து சென்றுள்ளார் என்றும் எதிர்மனுதாரர் மனுதாருக்கு 6 மாத காலமாக வார வட்டி ரூ,10000/-க்கு கொடுத்துள்ளார் என்றும் கிட்டதட்ட மனுதாருக்கு எதிர்மனுதாரர் வட்டி மட்டுமே ரூ,24000/- கொடுத்துள்ளார் என்றும் வாங்கிய பணத்திற்கு மேல் வட்டி மட்டும் எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரர் பெற்றுள்ளார் என்றும் காசோலையை திரும்ப கொடுக்கவில்லை என்றும் எதிர்மனுதாரர் 2 குழந்தைகளுக்கும் கண் பார்வைக்காக மருத்துவ செலவிற்கு மற்ற நபர்களிடம் கடன் பெற்று அதற்கும் வட்டி கட்ட முடியாத சூழ்நிலையில் எதிர்மனுதாரர் இருந்து வந்த நிலையில் மனுதாரர் 2 வாரமாக வட்டி பணம் தரவில்லை நீ கடையில் இருக்கக்கூடாது என்று அடிக்கடி தகராறு செய்து தணி தைக்க விடாமல் பிரச்சனை செய்து வந்துள்ளார் என்றும் எதிர்மனுதார் வேறு வழியின்றி அசல் பணத்தை மட்டுமாவது கொடுத்துவிடலாம் என்று எண்ணி 27.06.2023 ஏர்வாடி காவல்நிலையத்தில் மனுதார் மீதும் மற்ற நபர்கள் மீதும் புகார் கொடுத்தார் என்றும் காவலர்கள் விசாரித்து 6 மாத கால அவகாசத்திற்குள் வட்டியில்லாமல் அசல் பணம் ரூ.10000/- மட்டுமே கொடுக்குமாறும் அதனை மனுதாரர் ஏற்று இனிமேல் எதிர்மனுதாரரிடம் தகராறு செய்யமாட்டேன் என உறுதி கூறி வந்துள்ளார்.

2.3) மனுதாரர் காவல்நிலையத்தில் பேசி வந்துவிட்டு எதிர்மனுதாரர் பெயர், பணம், தேதி நிரப்பாமல் கையொப்பம் மட்டும் இட்டு கொடுத்த வழக்கு காசோலையை மனுதாரரே ரூ,1,00,000/-என்று நிரப்பி அவரது பெயரையும் எழுதி 09.07.2023 தேதியிட்டு 11.07.2023 அன்று வசூலுக்கு போட்டுள்ளார் என்றும் புகார் கொடுத்தது 27.06.2023 என்றும் மனுதாரர் வசூலுக்கு போட்டது 11.07.2023 என்றும் மனுதாரர் வேண்டுமென்றே இந்த எதிர்மனுதாரிடம் அதிக பணம் வசூலிக்க வேண்டும் என்று நினைத்து அப்பாவியான எதிர்மனுதாரிடம் அதிக பணம் வசூலிக்க வேண்டி வழக்கு காசோலையில் ரூ.1,00,000/- நிரப்பி காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் இது

ஏற்புடையதல்ல என்றும் எதிர்மனுதாரர் மனுதார் மீது புகார் கொடுத்ததன் புகார் மனு மற்றும் புகார் மனு ரசீது எண்.379/2023 மற்றும் அறிக்கை ஆகியவைகள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்று அசலினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாருக்கு மனுதார் வீடு எங்கு உள்ளது என்று எந்த விவரமும் தெரியாது என்றும் மனுதாரர் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளார் என்பதற்கான எந்தவொரு மருத்துவ சான்றிதழும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே மேற்படி மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்,**

4. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

5. மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 262 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க கோரி இந்த நீதிமன்றத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் 09.07.2023 தேதியிட்ட காசோலை 11.07.2023 அன்று வசூலுக்கு இடப்பட்டு, 12.07.2023 அன்று திருப்பப்பட்டு, 21.07.2023 அன்று அறிவிப்பு அனுப்பப்பட்டு எதிர்மனுதாரர் 22.07.2023 எதிர்மனுதாரரால் பெற்றுக்கொள்ள மறுத்து 22.07.2023 அன்று மனுதாரர் வசம் திரும்ப அனுப்பப்பட்டுள்ளது. அதன்பின் மனுதாரரால் 23.05.2024 அன்று 262 நாட்கள் காலதாமதத்துடன் இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரருக்கு மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டதால் உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியவில்லையென்றும் அதனால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள எதிர் வழக்கு குறித்து அசல் வழக்கில் முழு விசாரணைக்கு பிறகே தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வழக்கில் இரு தரப்பும் கேட்கப்பட்டு முடிவு செய்யப்படவேண்டியது இன்றியமையாதது என்பதாலும், இது குற்ற வழக்கு என்பதாலும், மனுதாரர் காசோலை மோசடியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அசல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மனுதாரர் காலதாமதத்திற்குண்டான போதுமான காரணத்தை மனுவில் குறிப்பிட்டுள்ளதாலும், மேற்படி 262 நாட்கள் காலதாமதம் மன்னிக்கப்பட்டு இந்த மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது .

**எனவே மேற்கண்டவாறு இந்த மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, இன்று

2025-ஆம் வருடம் நவம்பர் மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை அவையறிய பகரப்பட்டது.

MOSES JEBASINGH
Digitally signed by MOSES JEBASINGH
Date: 2025.11.21 17:42:00 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வள்ளியூர்.**